Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.267/2019

**Depositions of PW- 8**

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.கே.விஜி** | Occupation | காவல் ஆய்வாளர் |
| Father's name | **கிருஷ்ணன்** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of January 2026.

27.01.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த வருகிறேன். கடந்த 11.06.2016 ம் தேதியில் நான் மம்சாபுரம் காவல்நிலைய பொறுப்பில் இருக்கும் போது மம்சாபுரம் ஒத்தப்பட்டி காளியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த கருப்பசாமி மகன் முருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக் கேற்ப மம்சாபுர காவல் நிலைய குற்ற எண்.118/2016 பிரிவுகள் 294(பி), 506(1) உ/இ 4 TNPPDL Act–ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார் மனுவின் அசலையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், மற்றொரு நகலை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்காக அனுப்பினேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கு சம்பவமானது 08.06.2016 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்றதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 08.06.2016 அன்று

மதியம் 02.00 மணியளவில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பவம் சம்பந்தமாக எங்கள் காவல் நிலையத்தில் 11.06.2016 அன்று இரவு 08.00 மணியளவில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும் எங்கள் காவல் நிலையத்திற்கும் சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். புகார்தாரர் புகார் மனுவை எழுதி எடுத்து வந்தாரா அல்லது காவல் நிலையத்தில் வைத்து எழுதினாரா என்றால், எழுதப்பட்ட புகார் மனுவை காவல் நிலையத்திற்கு எடுத்து வந்தார். சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து காலதாமதமாக புகார் கொடுத்ததற்கான காரணம் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையானது 48 மணி நேரம் கழித்து 13.06.2016 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மறுநாளே நீதிமன்ற காவலர் மூலம் அனுப்பிவிட்டோம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தே அன்றே இரவு நேரம் ஆகிவிட்டதால், மறுநாள் அனுப்பினோம். நீதிமன்ற காவலரிடம் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு பாஸ்போர்ட் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. நான் மேற்படி கூறியவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மறுநாள் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றாலும், 13.06.2016 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன் என்றாலும் சரியல்ல. 07.06.2016 அன்று புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் சண்டை நடந்தது பற்றி புகார் மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சண்டை நடந்தது பற்றி கூறியுள்ளார். ஆனால் தேதி குறிப்பிடப்படவில்லை. புகார் மனுவில் சாட்சிகளான முனியாண்டி மற்றும் காளியப்பன் ஆகியோர் சம்பவத்தை பார்த்து தன்னிடம் கூறியதாக புகார்தாரரால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதே போல் புகார் மனுவில் தென்னைமரம், மோட்டார் மற்றும் ஓஸ் பைப் ஆகிய சேதமடைந்ததாக குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால், வாழை மரங்கள் மட்டும் சேதமடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் கொடுத்த தேதியான 11.06.2016 அன்று எதிரிகள் புகார்தாரரின் வீட்டிற்கு எதிரிகள் வந்து

சண்டையிட்டு கொலைமிரட்டல் விடுத்ததாக புகாரில் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால், தேதி, குறிப்பிட்டு கூறப்படவில்லை. ஆனால் சம்பவத்தை பார்த்துவிட்டு வீட்டிற்கு சென்ற போது எதிரிகள் வாழை மரத்தை வெட்டியவாறு உன்னையும் வெட்டுவேன் என்று கூறியதாக புகாரில் குறிப்பிட்டுள்ளார். புகாரில் எத்தனை வாழை மரங்கள், மற்றும் எத்தனை தென்னை மரங்கள் சேதமடைந்தது பற்றி குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு புகார் மனு கொடுப்பதற்கு முன்பாகவே புகார்தாரர் தனக்கு சொந்தமான காட்டில் உள்ள போர் மோட்டாரை சேதப்படுத்தியதாக இருளப்பன், செல்வம், செல்லையா, ஆகியோர் மீது புகார் கொடுக்கப்பட்டு அதன் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் அது பற்றி தற்போது எனக்கு நியாபகம் இல்லை. இவ்வழக்கில் சாட்சிகள் யாரையும் நான் விசாரணை செய்தேனா என்றால் முதல் தகவல் அறிக்கை மட்டும் பதிவு செய்தேன். விசாரணையை காவல் ஆய்வாளர் மேற்கொண்டார். இவ்வழக்கில் மேற்படி சொன்ன நேரத்தில், சொன்ன விவதத்தில் புகார் மனு பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் காவல் ஆய்வாளர் கேட்டுகொண்டதற்கிணங்க எதிரிகள் மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.